**செய்தி வெளியீடு எண்: 084** **நாள்:17.05.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள தமிழகத்தின் பொருளாதாரம் மீண்டெழுவதற்கும், இந்தப் பேரிடரை எதிர்கொள்வதற்கும் தமிழ்நாடு அரசிற்கு கூடுதலான நிதி ஆதாரங்களைச் செலவிட வேண்டிய தேவை உள்ளதால், அரசின் முனைப்பான முயற்சிகளுக்கு உதவிடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை இன்று (17.5.2021) முகாம் அலுவலகத்தில், சன் குழுமத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. கலாநிதி மாறன் அவர்கள் சந்தித்து, கொரோனா நிவாரணப் பணிகளுக்காக மாநில பேரிடர் மேலாண்மை நிதியத்திற்கு 10 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது, திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் திருமதி காவேரி கலாநிதி ஆகியோர் உடனிருந்தனர்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**